<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 395/2012 | சாட்சி | பி.வா.சா.4 |
| பெயர் | சின்னதம்பி | நாள் | 23.04.2024 |
| தகப்பனார் பெயர் | முத்துக் கவுண்டர் | | |

**<u>வாதி தரப்பில் பி.வா.சா.4 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-**

15) என் பிரமாண பத்திரிக்கையின் இரண்டாவது பத்தியில் அவரவர்களுக்கு பிரிந்த நிலத்தில் அனைவரும் வீடு கட்டி குடியிருந்து வருவதாக நான் சொல்லியுள்ள நிலையில் மொத்தம் மேற்படி நிலத்தில் எத்தனை வீடுகள் உள்ளன என்றால், இரண்டு வீடுகள் உள்ளது. மேற்படி வீடுகளை யார் யார் கட்டினார்கள் என என் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால், அது குறித்து நான் சொல்லவில்லை. மேற்படி வீடுகளின் கதவு எண்கள் எனக்கு தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

16) மேற்படி வீடுகளுக்கான வீட்டு வரிகளை யார் யார் செலுத்தி வருகிறார்கள் என என் என் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. இவ்வழககு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பே மேற்படி வீடுகள் கட்டப்பட்டுள்ளதாக நான் என் பதிலுரையில் சொல்லியுள்ளேனா அல்லது இவ்வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டுதான் மேற்படி வீடுகள் கட்டப்பட்டதாக நான் சொல்லியுள்ளேனா என்றால், இவ்வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பே மேற்படி வீடுகள் கட்டப்பட்டுள்ளதாக நான் சொல்லியுள்ளேன்.

17) வாதி பழனியப்பன் அவரது மகள் ராசாத்திக்கு தன் பாகத்திலிருந்து 0.20 செண்ட் நிலத்தை கிரயம் கொடுத்துள்ளதாக நான் சொல்லியுள்ள நிலையில், மேற்படி பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால், நகல் போட்டு பார்த்துள்ளேன். அவ்வாறு நான் நகல் பெற்று பார்த்தாக சொல்லும் பத்திரத்தை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. மேற்படி கிரய ஆவணம் எந்த தேதியில் ஏற்படுத்தப்பட்டது என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி கிரய ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை.

18) மேற்படி கிரய ஆவணத்தில் என்ன வாசகங்கள் எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், பழனியப்பனும், பாவாயியும் அவர்களது மகளான ராசாத்திக்கு கிரயம் கொடுப்பதாக சொல்லப்பட்டிருந்தது. எந்த சர்வே எண்ணிற்கு மேற்படி கிரயம் பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால், சர்வே எண் குறித்து தெரியவில்லை. மேற்படி கிரய பத்திரத்தை பற்றிய வேறு எந்த விவரத்தையும் என் பதிலுரையிலும், என் பிரமாண பத்திரிக்கையிலும் சொல்லவில்லை என்றால், சரிதான்.

19) மேற்படி கிரய ஆவணத்தில் என்ன சக்குபந்தி விவரங்கள் குறிப்பிடப்பட்டிருந்தது என்றால், தெற்கிலும், வடக்கிலும் புறத்தில் வையாபுரி நிலம், மேற்கில் பொன்னுசாமி நிலம், கிழக்கில் மணியின் நிலம் என குறிப்பிடப்பட்டிருந்தது. தற்போது வரை மேற்படி ராசாத்திக்கு கிரயம் கொடுத்தாக சொல்லும் நிலத்தை வாதி பழனியப்பன் தான் அனுபவித்து வருகிறார் என்றால், சரிதான். மொத்தம் உள்ள 0.40 செண்ட் நிலத்தையும் பழனியப்பன் தான் அனுபவித்து வருகிறார்.

20) தற்போது வரை சொத்துக்கள் பாகப்பிரிவினை செய்துகொள்ளப்படவில்லை என்றாலும், மேற்படி ராசாத்தியின் பெயரில் ஏற்படுத்தப்பட்டதாக நான் சொல்லும் பத்திரம் பெயரளவிலானது என்றால், சரியல்ல. குப்பண்ணனுக்கும், ஐயம்மாளுக்கும் பரம்பரை சொத்து எவ்வளவு என்றால், 1.20 ஏக்கர் ஆகும். வாதி தன் வழக்குரை சொத்து விவரத்தில் மொத்தம் எத்தனை சர்வே எண்களில், எவ்வளவு விஸ்தீரணம் காண்பித்துள்ளார் என எனக்கு தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

21) தாவா சொத்திற்குரிய சக்குபந்தி விவரங்கள் தெரியுமா என்றால், கிழக்குபுறம் மணியின் நிலம், தெற்கில் வெங்கடாஜலத்தின் நிலம், வடக்கிலும், மேற்கிலும் ராசாத்தியின் நிலம், ஆகும். நான் தற்போது எங்கு வசித்து வருகிறேன் என்றால், சின்னானூரில் வசித்து வருகிறேன். தாவா சொத்திற்கும் என் வீட்டிற்கும் சுமார் 1/2 கி.மீ தூரம் இருக்கும். தாவா சொத்து தாசகாப்பட்டி கிராமம் பழையூரில் அமைந்துள்ளது என்றால், சரிதான்.

22) என் பிரமாண பத்திரிக்கையில் 3 வது பத்தியில் ஐயம்மாளுக்கு குடும்ப பாகபிரிவினை படி பாத்தியப்பட்டதாக நான் சொல்லியுள்ள சொத்தின் சர்வே எண் குறித்து எனக்கு தெரியுமா என்றால், தெரியவில்லை. மேற்படி ஐயம்மாளுக்கு பாபிரிவினை படி பாத்தியப்பட்டதாக நான் சொல்லும் சொத்தின் சக்குபந்தி குறித்து எனக்கு தெரியுமா என்றால், கிழக்கில் மணியின் நிலம், தெற்கில் வெங்கடாஜலம் நிலம், மேற்கு மற்றும் வடக்கில் ராசாத்தியின் நிலம் உள்ளது. மேற்படி ஐயம்மாளுக்கு பாத்யப்பட்டதாக நான் சொல்லும் சொத்து அவருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால், தன் தாய் வழி சொத்து என அவர் சொன்னதன் அடிப்படையில் எனக்கு தெரியும்.

23) மேற்படி ஐயம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து ஏதேனும் ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால், இல்லை. மேற்படி ஐயம்மாள் யாருக்கேனும் உயில் எழுதிக்கொடுத்தாக என் பிரமாண பத்திரிக்கையில் நான் சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். எந்த தேதியில் உயில் எழுதிக்கொடுத்தார் என்றால், தேதி எனக்கு தெரியாது. மேற்படி உயிலை நான் பார்த்துள்ளேனா என்றால், பதிவு அலுவலகத்தில் பார்த்துள்ளேன். மேற்படி உயிலில் நான் சாட்சிக்கையெழுத்து ஏதேனும் போட்டுள்ளேனா என்றால், இல்லை. மேற்படி உயிலில் யார் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளனர் என என் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை.

(வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.4 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/-திரு. R.மணிவர்மன்,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.